**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 931/2018**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of 10/2024**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **வெங்கடாசலம்** | **Caste:** | |
| **Father Name** | **அம்மையப்பகவுண்டர்** | **தொழில்** | விவசாயம் |
| **Village :** | **புலியூர் கிராமம்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 72 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 1வது வாதி ஆவேன். நான் எனக்காவும், மற்ற வாதிகளுக்காகவும் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணத்தின் தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1. | 01.06.1910 | வெங்கடாசலம் பெயரில் ஏற்பட்ட prayer ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.1 |
| 2. | – | வாதி வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்த வெங்கடாசல கவுண்டர் அவர்களின் குடும்ப | வா.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| | | வம்சாவளி வரைபடம் | |
| 3. | – | வாதி வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்த சின்னப்பகவுண்டர் அவர்களின் குடும்ப வம்சாவளி வரைபடம் | வா.த.சா.ஆ.3 |
| 4. | – | வாதி வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்த வேலப்பகவுண்டர் அவர்களின் குடும்ப வம்சாவளி வரைபடம் | வா.த.சா.ஆ.4 |

கற்றறிந்த வாதி வழக்கறிஞர் வாதி தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி இருப்பதாக கேட்டுக்கொண்டதன் பேரில் வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.

ஒம். திரு. வேடியப்பன்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.